**தலைப்பு 6 – பகிரங்க சேவை ஆணைக்குழு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள், பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்து நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகளின் தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 6 – பகிரங்க சேவை ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் சுட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஜூலை 18 ஆந் திகதி பகிரங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைககள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும், என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பகிரங்க சேவை ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிருவாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | பிழையின்றி மற்றும் நிதி முறைசார் விதத்துடன் செயற்படுவதென உறுதிப்படும் வகையில் அனைத்து நிதி விடயங்களும் திட்டமிடப்படல். | 1. செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரித்திருக்காமை. | 2.3 |
| | | 2. பாதீட்டு மதிப்பீடுகள் யதார்த்தமாகத் தயாரிக்காமை. | 2.9 |
| | | 3. கட்டுநிதி மதிப்பீடு தயாரிப்பதில் குறைபாடுகள் | 2.7 |
| | | 4. ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஏற்பாடுகள் தயாரிக்கும் முறைமை ஒன்று தயாரித்து கொள்ளல். | 1. இணங்காமை<br>2. மனித வள முகாமைத் துவத்தின் குறைபாடு | 2.9<br>2.10 |
| 127(2) | தனது கட்டுப்பாட்டின் கீழ் காணப்படும் திணைக்களங் களில் அப்போதைக்கு காணப்படும் செலவு விடய ங்களை போலவே புதிதாக அல்லது மிகையாக செலவிடு வதற்கான பிரேரணைகள் சிக்கனத் தன்மை மற்றும் வினைத்திறமை விடயத்தில் அமைச்சில் கூர்மையான பரிசோதனை மேற்கொள்ளல். | செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள் | 2.4 |

## 2. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பிரதான கடமைகள்

19 ஆம் அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் சாட்டப்பட்டிருந்த அதிகாரத்தின் பிரகாரம் இராணுவம், கடற்படை, வான்படை அங்கத்தவர் ஒருவர் அல்லது தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்ட தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஒருவர் அல்லது நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்ட பட்டியலிடப்பட்ட அரச உத்தியோத்தர் ஒருவர் அல்லது கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்ட இலங்கை கணக்காய்வு சேவையின் அங்கத்தவர் ஒருவர் அல்லது மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்ட மாகாண அரசாங்க சேவை ஊழியர்கள் அல்லது ஜனாதிபதி அவர்களினால் நியமனம் செய்யப்பட்ட அமைச்சு செயலாளர்கள் மற்றும் அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான கம்பனிகளை நிறுவன ஊழியர்களும் தவிர மாகாண சபைகளில் கடமையாற்றும் நாடளாவிய சேவைகள் என கணிக்கப்படும் உத்தியோகத்தர்கள் உட்பட ஏனைய அனைத்து அரச உத்தியோகத்தர்கள்,

- (அ) நியமனங்கள்
- (ஆ) பதவி உயர்வுகள்
- (இ) இடமாற்றங்கள்
- (ஈ) ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் சேவையில் இருந்து நீக்குதல்

## 2.2 செயலாற்றுகை

2017 ஆண்டிற்கான செயலாற்றுகை தொடர்பாக அழைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஆணைக்குழுவின் மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விபரம் | 2017 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மீதி | 2017 ஆண்டின் போது பெற்றவை | 2017 ஆண்டின் போது பூர்த்தி செய்தவை | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| நியமனங்கள் | 365 | 5771 | 5806 | 330 |
| பதவி உயர்வுகள் | 141 | 3382 | 3162 | 361 |
| சேவை யாப்பு | 05 | 01 | 03 | 03 |
| இடமாற்ற நடைமுறை | 04 | 18 | 13 | 08 |
| ஆட்சேர்ப்பு நடைமுறை | 56 | 76 | 61 | 71 |

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 71 ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகரித்திருக்காததுடன், 18 ஆட்சேர்ப்பு நடைமுறைகள் 2018 ஜூன் 14 திகதி அளவில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மீதியான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகரிக்காமல் இருப்பதற்கு தேவையான தகவல்கள் நிறுவனங்களில் இருந்து உரிய நேரத்தில் கொடுத்திருக்காமையும் காரணமாகியுள்ளது. உள்ளக வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டு இடமாற்ற நடைமுறை ஒன்று குறிப்பிட்ட நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

### 2.2.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்காக ஆணைக்குழுவின் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்திருக்கவில்லை.

## 2.3 பெறுகை செய்முறையை செயற்படுத்துதல்

**புதிய கட்டிடங்கள் நிர்மாணித்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆணைக் குழுவிற்காக புதிய கட்டிடமொன்று நிர்மாணிக்கும் ஒப்பந்தவேலைக்காக ஒப்பந்தக்காரருடன் ரூபா 417 மில்லியன் இற்கான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆணைக் குழுவிற்காக புதிய கட்டிட நிர்மாணித்தல் தொடர்பாக அக் கட்டிடத்தினை நிர்மாணிக்கும் வேலை குறிப்பிட்ட காலப்பகுதியில் வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வது தொடர்பாக ஆணைக்குழு திருப்தியடைய வேண்டுமென 2014 திசெம்பர் 24 ஆம் திகதிய அம்ப/14/1823/501/040 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானம் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரின் அவதானிப்பாக இருந்தது.

(ii) இந்த நிர்மாணவேலை செயற்திட்டம் 2015 ஜனவரி 02 திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் வேலை ஆரம்பிக்கப்பட்டு 900 நாட்கள் முடிவடையும் போது அதாவது 2017 ஜூன் 22 திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைத்தல் சான்றிதழ் வழங்கப்பட வேண்டிருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதியாகிய 2018 மார்ச் 08 திகதி அளவிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) கட்டிடம் நிர்மாணித்தல் தொடர்பாக அமைச்சரவை தீர்மானத்தில் சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் நிருவாகம் காட்டப்பட்டிருந்த கட்டிடத் திணைக்களத்தினால் சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததென உறுதிப்படுத்தப்பட்டிருக்காததுடன் ஆணைக்குழுவினால் இது தொடர்பாக கவனம் செலுத்தாமல் கட்டிடத் திணைக்களத்திற்கு செயற்திட்ட முகாமைத்துவக் கட்டணமாக ரூபா 12,056,100 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iv) ஒப்பந்த வேலைகள் திட்டமிடும் போது அறுதியான காலசட்டகம் ஒன்றின் பிரகாரம் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதனை உரிய முறையில் செயற்படுத்த வேண்டுமெனவும், புதிய கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் திட்டமிட்டுள்ளவாறு 2017 ஜூன் 22 திகதி பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாமல் போனமையினால் 7 மாத காலப்பகுதிக்கான கட்டிட வாடகையாக ரூபா 16,422,000 தொகை ஒன்றின் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு செலுத்துவதற்கு ஆணைக்குழுவிற்கு நேரிட்டிருந்தது.

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பண்டக் கணிப்பீடு**

2016 மார்ச் 31 திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் 2017 வருடாந்த கணிப்பீடு மேற்கொண்டு அந்த அறிக்கை சுற்றறிக்கையின் 3.1.6 பந்தியின் பிரகாரம் 2018 மார்ச் 17 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், ஆணைக்குழுவினால் அவ் அறிக்கை 2018 ஜூன் 30 திகதி அளவிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**2.5 ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள்**

2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 இன் பொது நிதிச் சுற்றறிக்கையின் 02(இ) பந்தியுடன் இணங்காமல் 2018 ஆண்டின் போது குறிப்பிட்ட செலவு விடயத்திற்கு நிதி ஏற்பாடு மேற்கொண்டிருக்காத போதும் ரூபா 84.34 மில்லியனிற்கான பொறுப்பு ஒன்றிற்கு அனுகியிருந்தது.

**2.6 கடமைகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள், பயன்படுத்துதல் மற்றும் சேமிப்பு தொடர்பாக தகவல்கள் மற்றும் கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக மீதி |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 114.61 | 114.57 | 0.04 | 0.03 |
| | மூலதன | 9.07 | 8.23 | 0.84 | 9.26 |
| | **மொத்தம்** | **123.68** | **122.80** | **0.88** | **0.71** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2014 | மீண்டுவரும் | 125.44 | 123.26 | 2.18 | 1.74 |
| | மூலதன | 119.28 | 106.91 | 12.37 | 10.37 |
| | **மொத்தம்** | **244.72** | **230.17** | **14.55** | **5.94** |
| 2015 | மீண்டுவரும் | 141.54 | 140.14 | 1.40 | 0.99 |
| | மூலதன | 281.10 | 70.47 | 210.63 | 74.93 |
| | **மொத்தம்** | **422.64** | **210.61** | **212.03** | **50.17** |
| 2016 | மீண்டுவரும் | 159.00 | 157.01 | 1.99 | 1.25 |
| | மூலதன | 185.15 | 126.47 | 58.68 | 31.69 |
| | **மொத்தம்** | **344.15** | **283.48** | **60.67** | **17.63** |
| 2017 | மீண்டுவரும் | 197.11 | 184.17 | 12.94 | 6.56 |
| | மூலதன | 254.50 | 160.77 | 93.73 | 36.83 |
| | **மொத்தம்** | **451.61** | **344.94** | **106.67** | **23.62** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பாதீட்டு மதிப்பீடுகள் தயாரித்தல்**

ஆணைக்குழுவிற்கு உரிய கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக தேவையான நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டு மதிப்பீடு யதார்த்தமான முறையில் தயாரிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்படவில்லை. அதன் பிரகாரம், ஆணைக்குழுவினால் புதிய கட்டிடம் நிர்மாணிப்பதற்காக மொத்த கிரயம் மதிப்பீட்டின் பிரகாரம் தேவையான மொத்த ஏற்பாடுகளும் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி அளவிலும் கட்டிடத்தின் நிர்மாணவேலைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாமையால் வழங்கப்பட்டிருந்த மொத்த ஏற்பாடுகளில் ரூபா 92.79 மில்லியன் தொகை எனப்படும் 37 சதவீத ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஒதுக்கீட்டு கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

மூலதன செலவு விடயம் ஒன்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,000,000 இற்கான மொத்த தேறிய ஏற்பாடுகளும் வேறு மூலதன செலவு விடயமொன்றிற்கு மாற்றப்பட்டிருந்தது.

**(ii) மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருத்தல்**

நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் பிழையற்ற செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டுமெனினும் ஆணைக்குழுவினால் மீண்டுவரும் செலவு விடயமொன்று மற்றும் 03 மூலதனச் செலவு விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் மீதியை அந்த செலவு விடயங்களுடன் தொடர்பான தேறிய ஏற்பாடுகளில் 34 சதவீதம் முதல் 64 சதவீதம் வரையான வீச்சு அளவினை கொண்டிருந்தது.

## 2.7 கட்டுநிதிக் கணக்கு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டு இறுதி காலாண்டிற்காக விண்ணப்பிப்பதற்காக திட்டமிட்டிருந்த கட்டுநிதி ரூபா 111.22 மில்லியன் தொகையும் விண்ணப்பித்திருந்த கட்டுநிதி ரூபா 269.76 மில்லியனும் கிடைத்திருந்த கட்டுநிதி ரூபா 142.76 மில்லியனும் ஆக இருந்தது. இதன் பிரகாரம் ஆணைக்குழுவினால் கட்டுநிதி திட்டமிட்டுள்ளவாறு விண்ணப்பிக்காமல் இறுதிக் காலாண்டில் மிகையாக விண்ணப்பித்திருந்தமையால் கட்டுநிதிகள் கிடைக்காமல் ஆண்டு இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.8 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை/ நிதிப் பிரமாணம் 502(2) பிரகாரம் அதன் 11 ஆவது பிண்ணினைப்பின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பொருத்தமான விதத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உடன்பாட்டுடன் பேணப்பட வேண்டுமெனினும் ஆணைக்குழுவினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று நாளது வரையாக பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.9 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

2002 மார்ச் 30 திகதிய 10/2000 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் மூலம் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகளில் ஆலோசனை சபைகள் விரைவாக நிருவப்பட வேண்டுமெனினும் ஆணைக்குழுவினால் 2018 மார்ச் 30 திகதி வரையும் குறிப்பிட்ட ஆலோசனை சபைகள் அமைந்திருக்கவில்லை.

## 2.10 மனித வள முகாமைத்துவம்

மேலே 2.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான, வெற்றிடமான பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் ஆளணி வேதனச் செலவின் தொகுதிக்காக ரூபா 120.43 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைப் பதவியணியினர் |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 49 | 37 | 12 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 09 | 05 | 04 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 115 | 99 | 16 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 54 | 45 | 09 | - |
| (v) | அமைய/ஒப்பந்த | - | 03 | - | 03 |
| | மொத்தம் | 227 | 189 | 41 | 03 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆணைக்குழுவின் அலுவல்களை தடையின்றி நடாத்திச் செல்வதற்காக தேவையான பதவியணியினை இனங்கண்டு மீளாய்வாண்டில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும் மூன்று உத்தியோகத்தர்கள் மாத்திரம் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ருந்தது. மீதியான 38 வெற்றிடங்களை மீளாய்வாண்டின் போது நிரப்புவதற்கு நிருவுவதற்கு முடியாதிருந்ததுடன் ஒவ்வொரு மட்டத்திலும் காணப்பட்ட வெற்றிடங்கள் 17 சதவீதம் முதல் 44 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. 2018 ஆண்டின் போது சிரேஷ்ட நிலை காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பாக போது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சை வினவியிருந்ததுடன் ஏனைய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.